## வரையறுக்கப்பட்ட திருகோணமலை மின்சாரக் கம்பனி – 2016/2017

---

வரையறுக்கப்பட்ட திருகோணமலை மின்சாரக் (''கம்பனி'') கம்பனியின் 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை பாரளுமன்றத்திற்கு சமர்பிக்கப்பட்டது. இந்தக் கணக்காய்வினை மேற்கொள்கையில் நான் பொதுத்துறையிலுள்ள பட்டயக்கணக்காளர் நிறுவனமொன்றின் உதவியை பெற்றுக்கொண்டேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

கைவிடப்பட்ட சம்பூர் மின்வலுப்பொறி செயற்திட்டத்துடன் தொடர்புடைய மூலதன நடைபெற்று வரும் வேலைக்கான ரூபா 328,109,272 தொகையொன்று நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தில் உள்ளடக்கப்பட்டது. ஏற்படக்கூடிய சாதகமான நட்டக்கழிவை மதிப்பிடுவதற்காக 2017 மார்ச் 31 இல் உள்ளவாறு முகாமைத்துவத்தால் விரிவான நட்டக்கழிவு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த மீதியானது நட்டக்கழிவு செய்யப்பட்டிருந்தால் கம்பனியின் தேறிய இலாபங்கள் மற்றும் தேறிய சொத்துக்களானது மதிப்பிடப்பட்ட நட்டக்கழிவு மீதித் தொகையால் குறைந்திருக்க முடிந்திருக்கும்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.4 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, கம்பனியின் 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**விடயங்களை சுட்டிக்காட்டல்**

தற்போதைய நிதி ஆண்டின் போது சம்பூர் நிலக்கரி மின்வலுப் பொறியின் அபிவிருத்தி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தது என குறிப்பு 4 இல் கவனஞ்செலுத்தப்பட்டிருந்தது. இது, குறிப்பு 04 இல் காட்டப்பட்டுள்ளவாறான ஏனைய விடயங்களுடன் சேர்த்து தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவிற்கமைய கம்பனி தொடர்ந்தியங்குவதற்கான கம்பனியின் இயலுமை பற்றிய முக்கிய சந்தேகத்தை ஏற்படுத்தும் முக்கியத்துவமான நிச்சயமற்ற தன்மையின் உள்ளதன்மையினை சுட்டிக்காட்டுகின்றது.

**2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) எனது அபிப்பிராயத்தில்,

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும் மற்றும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

3. நிதிசார் மீளாய்வு
-----------------------------

3.1 நிதிசார் விளைவுகள்
-----------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 10,590,592 தேறிய இலாபத்திற்கு எதிராக ரூபா 22,008,999 தேறிய நட்டத்தை விளைவித்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 32,599,591 ஆன பின்னடைவினைச் சுட்டிக்காட்டுகின்றது. சாத்தியவளக் கற்கைகளுடன் தொடர்புடைய ஆரம்ப செயற்திட்டச் செலவினங்கள் ரூபா 30,574,226 ஆல் அதிகரித்தமை நிதிசார் விளைவுகளின் இந்தப் பின்னடைவிற்குப் பிரதான காரணமாகவிருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு
-----------------------------------

4.1 செயலாற்றல்
------------------

கம்பனியின் பிரதான செயற்பாடானது இலங்கை மின்சார சபையின் தேசிய மின்சார விநியோகத்திற்கு (National Grid) மின்சாரத்தை உற்பத்தி செய்து வழங்குவதாகும். அதற்கிணங்க, கம்பனியானது, சுற்றாடல் தாக்கங்களின் மதிப்பீடு கற்கைகளை மேற்கொண்டதுடன் 2016 பெப்ரவரியில் ஈஐஏ (EIA) அனுமதியைப் பெற்றுக்கொண்டது. எனினும், மின்சக்திப் பொறியின் நிர்மாணமானது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2017 ஏப்ரல் 26 இல் இலங்கை மற்றும் இந்திய அரசாங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தின் படி 500 MW LNG தீப்பொறிச் செயற்திட்டமானது தேவையான மீள்கட்டமைப்புடன் கம்பனியால் கையேற்கப்படவுள்ளது.

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்
-------------------------------------------------------------------

5.1 ஆண்டறிக்கை
---------------------

மீளாய்வாண்டிற்கான ஆண்டறிக்கையானது பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.